வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2513/இ2/2019 நாள் 31.05.2019

– – –

| | |
|---|---|
| பொருள் – | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009– 2019–2020ம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் RTE 25% இட ஒதுக்கீட்டின் கீழ் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவின் கீழ் (சிறப்பு பிரிவு) விண்ணப்பிக்கப்பட்ட மாணவர்கள் நேரடி சேர்க்கை மேற்கொள்ள ஆணை வழங்குதல் – சார்பு |
| பார்வை – | 1. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011<br>2. அரசாணை நிலை எண்.60 பள்ளிக்கல்வி(எக்ஸ்2)துறை நாள் 01.04.2013<br>3. அரசாணை நிலை எண்.66 பள்ளிக்கல்வி(பொது2)துறை நாள் 07.04.2017<br>4. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மை தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை–06 ந.க.எண்.843/இ1/2019 நாள். .05.2019. |

–––

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் செயல்முறைகளுக்கிணங்க , குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009ன் படி 2019–20ம் கல்வி ஆண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் 25% இடஒதுக்கீட்டில் உள்ள இடங்களில் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகையில் சிறப்புப் பிரிவில் விண்ணப்பிக்கப்பட்ட இணைப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் நேரடி சேர்க்கை மேற்கொள்வதற்கான ஆணை வழங்கப்படுகிறது.

| **வ.எண்.** | **சேர்க்கை செய்யப்படும் குழந்தையின் பெயர் / பெற்றோர் கைபேசி எண்.** | **விண்ணப்ப எண்.** | **சேர்க்கை வழங்க அனுமதிக்கப்படும் பள்ளியின் பெயர்** |
|---|---|---|---|
| ---------------------------------------------------LIST ENCLOSED ------------------------------------------------- | | | |

பட்டியலில் உள்ள குழந்தைகள் சேர்கைக்காக சார்ந்த பள்ளியினை அனுகும்போது குழந்தையின் பிறப்புச் சான்று, இருப்பிடச் சான்று, ஜாதிச் சான்று மற்றும் சிறப்பு பிரிவினருக்கான முன்னுரிமைச்சான்று ஆகிய அனைத்து சான்றுகளும் பள்ளியில் சமர்பிக்கப்பட்டபின்னரே சேர்க்கை வழங்கப்படவேண்டும். தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் 31.05.2019 அன்று பள்ளி தகவல் பலகையில் ஒட்டப்பட வேண்டும். மேலும் பெற்றோரின் கைபேசிக்கு குறுந்தகவல் அனுப்பி சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளின் பட்டியல் பள்ளியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். உரிய சான்றுகள் இல்லாமல் இருப்பின் எக்காரணம் கொண்டும் சேர்க்கை மேற்கொள்ளக்கூடாது என்று சார்ந்த பள்ளி முதல்வருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : பட்டியல் (1 முதல் 8 பக்கங்கள்)

ஒம்/– xxxxxxxxxx
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. சார்ந்த குழந்தையின் பெற்றோர்
2. சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்
3. சார்ந்த பள்ளி முதல்வர்